# කාර්ය සාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# Performance Report

# 2023

## කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුව

## முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்

## DEPARTMENT OF MANAGEMENT AUDIT


| | | |
|---|---|---|
| මහලේකම් කාර්යාලය | செயலகம் | The Secretariat |
| කොළඹ 01 | கொழும்பு 01 | Colombo 01 |

2020/02 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஆலோசனைகளுக்கு அமைவாக இலங்கைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டது.

**முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம்**

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு**

**செயலகம்**

**கொழும்பு 01**

**2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**

**நிறுவனத்தின் பெயர் : முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம்**

**செலவினத் தலைப்பு இல. :324**

**உள்ளடக்கம்** **பக்க இலக்கம்**


| | |
|---|---|
| அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு | 1-5 |
| அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு | 6-7 |
| அத்தியாயம் 03 - வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை | 8-17 |
| அத்தியாயம் 04 - செயலாற்றுகை சுட்டிகள் | 18-23 |
| அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை | 24-25 |
| அத்தியாயம் 06 - மனித வள விபரம் | 26-28 |
| அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை | 29-37 |

# அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

## 1.1 அறிமுகம்

2008.01.25 ஆம் திகதிய 08/0200/306/012 ஆம் இலக்கத்தைக் கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் திறைசேரியின் திணைக்களமொன்றாக 2008.02.01 ஆம் திகதியன்று தாபிக்கப்பட்டுள்ள அதேவேளையில், திறைசேரியினால் அரசாங்கத்தின் அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் விடுவிக்கப்படுகின்ற நிதியங்களை வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்காக உள்ளக நிருவாக முறைமையை வலுவூட்டுவது இதன் நோக்கமாகும்.

## 1.2 நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி, மற்றும் குறிக்கோள்

### 1.2.1. நோக்கு

அதி உயர் செயலாற்றுகையையும் பொறுப்புக் கூறலையும் கொண்ட அரச சேவையொன்றின் பொருட்டு அர்ப்பணித்துள்ள தொடர்ச்சியாக பெறுமதியைச் சேர்க்கின்ற மிகச் சிறந்த முகாமைத்துவ கணக்காய்வு மற்றும் மேற்பார்வை நிறுவனமாகத் திகழ்தல்.

### 1.2.2. செயற்பணி

உள்ளக நிருவாகத்தையும் செயல்முறையையும் வலுப்படுத்துவதினூடாக எதிர்பார்க்கப்படும் வெயலாற்றுகையை அடைந்துகொள்வதற்காக அரச துறைக்கு வழிகாட்டலையும் உதவியையும் வழங்குதல்.

### குறிக்கோள்

1. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல்.

2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் மூலம் உள்ளகக் கணக்காய்விற்கு வலுவூட்டல்.

3. உள்ளகக் கணக்காய்வுப் பணிகளை விருத்திசெய்வதற்குத் தேவையான வழிகாட்டல்களை அறிமுகப்படுத்துதல்.

4. அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முகாமைத்துவ கணக்காய்வு செயற்பாடுகளுக்கு வலுவூட்டல்.

5. விசேட விசாரணைகளினூடாக அரச துறையில் ஏற்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய மோசடிகளை அடையாளம் காணுதல் மற்றும் அவ்வாறான நிலைகளையும் சம்பவங்களையும் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் சிபாரிசுகளை அறிமுகப்படுத்துதல்.

## 1.3 முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள்

1. வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன்மிக்க உள்ளக நிருவாகச் செயல்முறையை அறிமுகப்படுத்துதல்.

2. உள்ளகக் கணக்காய்வுக்கான சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தலும் இற்றைப்படுத்துதலும்.

3. அரச துறையிலுள்ள உள்ளகக் கணக்காய்வு அலகுகளை ஒருங்கிணைத்தலும் அது தொடர்பான வழிகாட்டல்களை வழங்குதலும்.

4. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வாளர்களின் அறிவையும் திறன்களையும் விருத்தி செய்தல்.

5. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தல், அது தொடர்பான வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான பங்களிப்பினை வழங்குதல்.

6. விசேட விசாரணை மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.


7. அரச கணக்குகள் பற்றிய செயற்குழுக் கூட்டங்களில் பங்குபற்றுமதுலும் திறைசேரி அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பித்தலும்

8. தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நடவடிக்கைகளை எடுத்தல்.

9. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்களினதும் உள்ளகக் கணக்காய்வாளர்களினதும் செயலாற்றுகையை மேற்பார்வைசெய்தல்.

10. திணைக்களத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

## 1.4 2023.12.31 ஆம் திகதியில் திணைக்களத்தின் அமைப்புரீதியான கட்டமைப்பு




மேலதிக பணிப்பாளர் நாயகம் (COPA/FIN)- மேலதிக பணிப்பாளர் நாயகம் (அரச கணக்குகள் பற்றிய குழுக் கூட்டிணைப்பு)
மேலதிக பணிப்பாளர் நாயகம் (AMC) - மேலதிக பணிப்பாளர் நாயகம் (கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டிணைப்பு)
மேலதிக பணிப்பாளர் நாயகம் (GEN AD) - மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிறுவனம் மற்றும் நிருவாகம்)

பணிப்பாளர் (SOE) - பணிப்பாளர்
பணிப்பாளர் (PCC) - பணிப்பாளர் (மாகாண சபைகளின் கூட்டிணைப்பு)
பணிப்பாளர் (HRD) - பணிப்பாளர் (மனித வள அபிவிருத்தி)
பணிப்பாளர் (RIAR)- பணிப்பாளர் (உள்ளக கணக்காய்வு அறிக்கை மீளாய்வு)
பணிப்பாளர் (ADM) - பணிப்பாளர் (நிறுவனம் மற்றும் நிருவாகம்)
பணிப்பாளர் (LFP) - பணிப்பாளர் (கருத்திட்ட கூட்டிணைப்பு - வெளிநாட்டு நிதி)
பணிப்பாளர் (FFP) - பணிப்பாளர் (கருத்திட்ட கூட்டிணைப்பு - உள்நாட்டு நிதி)

பிரதி/உதவிப் பணிப்பாளர் (COPA) - பிரதி/உதவிப் பணிப்பாளர் (அரச கணக்குகள் பற்றிய குழுக் கூட்டிணைப்பு மற்றும் நிதி)
பிரதி/உதவிப் பணிப்பாளர் ((FIN) - பிரதி/உதவிப் பணிப்பாளர் (நிதி)
பிரதி/உதவிப் பணிப்பாளர் (HRD) - பிரதி/உதவிப் பணிப்பாளர் (மனித வள அபிவிருத்தி)
பிரதி/உதவிப் பணிப்பாளர் (AMC) - பிரதி/உதவிப் பணிப்பாளர் (கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டிணைப்பு)
பிரதி/உதவிப் பணிப்பாளர் (ADM) - பிரதி/உதவிப் பணிப்பாளர் (நிறுவனம் மற்றும் நிருவாகம்)
பிரதி/உதவிப் பணிப்பாளர் (LFP) - பிரதி/உதவிப் பணிப்பாளர் (கருத்திட்ட கூட்டிணைப்பு - உள்நாட்டு நிதி)
பிரதி/உதவிப் பணிப்பாளர் (FFP & INV) - பிரதி/உதவிப் பணிப்பாளர் (கருத்திட்ட கூட்டிணைப்பு - வெளிநாட்டு நிதி மற்றும் விசாரணை)

**2023.12.31 ஆம் திகதியில் பதவியினர்**

| பதவி | பதவியணி | | |
|---|---|---|---|
| | அனுமதிக்கப்பட்ட | உண்மையான | வெற்றிடங்கள் |
| பணிப்பாளர் நாயகம் | 01 | 01 | - |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (இ.நி.சே.) | 01 | 01 | - |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (இ.க.சே.) | 02 | 02 | - |
| பணிப்பாளர் (இ.நி.சே.) | 01 | 01 | - |
| பணிப்பாளர் (இ.க.சே.) | 04 | 04 | - |
| பணிப்பாளர் (இ.தி.சே.) | 02 | 01 | 01 |
| பிரதிப்/ உதவிப் பணிப்பாளர் (இ.நி.சே.) | 01 | - | 01 |
| பிரதிப்/ உதவிப் பணிப்பாளர் (இ.க.சே.) | 04 | 02 | 02 |
| பிரதிப்/ உதவிப் பணிப்பாளர் (இ.தி.சே.) | 01 | 01 | - |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 09 | 09 | - |
| முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 14 | 11 | 03 |
| சாரதி | 04 | 03 | 01 |
| அலுவலகப் பணி உதவியாளர் | 06 | 05 | 01 |
| **மொத்தம்** | **50** | **41** | **09** |

## 1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

- ❖ உள்ளக கணக்காய்வு மேற்பார்வைப் பிரிவு

  (a) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டிணைப்பு
  (b) அரச கணக்குகள் பற்றிய குழுக் கூட்டிணைப்பு
  (c) விசேட விசாரணை மற்றும் சுற்றறிக்கை
  (d) மனித வள அபிவிருத்தி
  (e) உள்ளகக் கணக்காய்வாளர்களின் செயலாற்றுகை மேற்பார்வை
  (f) உள்ளக கணக்காய்வு அறிக்கை மீளாய்வு
  (g) மாவட்ட செயலகங்களின் கூட்டிணைப்பு
  (h) மாகாண சபைகளின் கூட்டிணைப்பு
  (i) அபிவிருத்திக் கருத்திட்டம்

- ❖ நிருவாகப் பிரிவு
- ❖ கணக்குப் பிரிவு

# 2. அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

## 2.1. நவீனமயப்படுத்தப்பட்ட அரச உள்ளக கணக்காய்வு செயல்முறை

முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் 15 வருடங்களாக அரச துறையின் நிதி ரீதியான பொறுப்புக்கூறலின் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. நிதி ஒழுங்குவிதி 133 இற்கு அமைவாகவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழ் இதுவரையில் அரச நிதி நிருவாகத்தை வலுவூட்டுதல் மற்றும் உகந்த செலவினம் ஆகியவற்றின் கீழ் அதிகபட்ச பொதுமக்கள் சேவைகளை வழங்குவதற்குத் தேவையான வழிகாட்டல்களை மேற்கொள்கின்ற அதேவேளையில் ஆலோசனை ரீதியான மற்றும் மீளாய்வுச் சேவையினையும் நிறைவேற்றுகின்றது. இதன்போது பல்வேறு அரச நிறுவனங்களினால் சுற்றறிக்கைகள் மற்றும் சட்ட ஆலோசனைகளுக்கு இனங்கியதாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை மேற்பார்வை செய்கின்ற அதேவேளையில் தேவையான சந்தர்ப்பங்களில் பொருத்தமான உள்ளக நிருவாக முறைமையை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்களையும் மேற்கொண்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் அமைச்சுக்கள், விசேட செலவின அலகுகள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள் ஆகியவற்றின் பிரதான உள்ளக கணக்காய்வாளர்களின் செயலாற்றுகை மற்றும் திறன்களை விருத்தி செய்வதற்காக விசேட கவனத்தைச் செலுத்தி காலத்திற்கேற்ற முக்கியமான சில துறைகளில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ள அதேவேளையில் அதன் மூலம் பிரதான உள்ளக கணக்காய்வாளர்களின்/ உள்ளக கணக்காய்வாளர்களின் மற்றும் உதவிப் பதவியினர்களின் திறன்களை விருத்திசெய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஒருசில அபிவிருத்திக் கருத்திட்டங்களின் பலவீனமான கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் முறையான உள்ளக நிருவாக முறைமையொன்று தொழிற்படாமை போன்றவற்றின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றுகையை அடைந்துகொள்ள முடியாமற்போயுள்ளது என்பது கருத்திட்ட உள்ளகக் கணக்காய்வு மீளாய்வுக் குழுக் கூட்டங்களிலும் அதேபோன்று கருத்திட்ட கள அவதானிப்பு நடவடிக்கைகளின் போதும் அவதானிக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக உள்ளக நிருவாக முறைமையை மேம்படுத்தி வலுவூட்டுவதின் ஊடாக மிகவும் சிறந்த உற்பத்தித்திறன்மிக்க கருத்திட்ட முகாமைத்துவத்தின் பொருட்டு பொதுத் திறைசேரியின் கருத்திட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட சகல திணைக்களங்களினதும் பொதுவான உடன்பாட்டைக் கொண்டதாக கருத்திட்ட முகாமைத்துவம் சார்ந்த விவரமான வழிகாட்டல் வரைவொன்று 2023 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது.

உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் மாகாண சபைகளில் உள்ள உள்ளகக் கணக்காய்வு அலகை முறைமைப்படுத்தி வலுவூட்டுவதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகளில் ஈடுபட்டமையும் 2023 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கியமான பணியாகும். அதேபோன்று உள்ளூராட்சி நிறுவனங்களில் உள்ளகக் கணக்காய்வு அலகுகளின் நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்காக உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டலொன்றைத் தயாரிக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று அரச துறையின் சகல செலவின அலகுகளிலும் அபாய முகாமைத்துவத்திற்குத் தேவையான அபாய முகாமைத்துவ வழிகாட்டல் கோவையொன்றைத் தயாரிக்கும் பணியும் மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளையில் 2024 ஆம் ஆண்டில் அதனை அரச துறை நிறுவனங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதுடன் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 (4) இன் படி, 41 (2) இன் உப பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சகல நிறுவனங்களினதும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கையை இந்தத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். இருப்பினும், 2023 ஆம் ஆண்டு வரை அரச கூட்டுத்துதாபனங்கள் மற்றும் நியதிச்சட்டமுறை நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் சம்பந்தமாக நேரடியான தலையீடு மேற்கொள்ளப்படவில்லை. அதேவேளையில் 2023 ஆம் ஆண்டில் அந்த நிறுவனங்களில் உள்ளகக் கணக்காய்வாளர்கள் பற்றியும் அவர்களது கடமைகள் பற்றியும் மதிப்பீடொன்றை மேற்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

## 2.2 எதிர்கால இலக்குகள்

2.2.1 மேலே 2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள கருத்திட்டங்களுக்கான வழிகாட்டல் கோவையை 2024 ஆம் ஆண்டில் வெளியிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் மூலம் கருத்திட்டங்களின் உள்ளக நிருவாகத்தை வலுவூட்டி கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கின்ற நோக்கங்களை நோக்கி வினைத்திறனுடன் செல்லுதல் மற்றும் வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்துதல் என்பன இலக்காக அமைந்துள்ளன.

2.2.2 உள்ளூராட்சி நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வு செயன்முறையை வலுவூட்டுவதற்கான வழிகாட்டல் கோவையொன்று வெளியிடப்படவுள்ளன.

2.2.3 பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்களின் அறிவு மற்றும் திறன்களை தொடர்ந்தும் மேம்படுத்துகின்ற அதேவேளையில், உள்ளகக் கணக்காய்வாளர்களினதும் உதவிப் பதவியினர்களினதும் அறிவு மற்றும் ஆற்றல்களை மேம்படுததுவதற்கு தொடர்ச்சியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி வலுவான மற்றும் தரமான பதவியணியொன்றை அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2.2.4 அபாய முகாமைத்துவத்திற்கான அபாய முகாமைத்து வரைசட்டகத்தை 2024 ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டுவருவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

2.2.5 கருத்திட்ட முகாமைத்துவம் பற்றிய முறையான வழிகாட்டலொன்றை வெளியிடுவது இதுவரை மேற்கொள்ளப்படாதிருப்பதன் காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைக்குரிய நிலைமைக்கு ஒரு பரிகாரமாக கருத்திட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட பொதுத் திறைசேரியின் தொடர்புடைய திணைக்களங்களினதும் ஏனைய தொடர்புடைய தரப்பினர்களினதும் பங்களிப்புடனும் உடன்பாட்டுடனும் விபரமான கருத்திட்ட முகாமைத்துவ வழிகாட்டலொன்று வரைவு செய்யப்பட்டுள்ளது.

திணைக்களத் தலைவர்

2024.05.

# அத்தியாயம் 03 - வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

## 3.1

ஏசீஏ-எவ்

2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2023 | | குறிப்பு | உண்மை நிலை 2023 | உண்மை நிலை 2022 | |
|---|---|---|---|---|---|
| - | வருமானப் பெறுகைகள் | | | | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | |
| - | மொத்த வருமானப் பெறுகைகள் (அ) | | - | - | |
| - | வருமானமற்ற பெறுகைகள் | | | | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 56,552,000 | 55,754,100 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 137,591 | 28,073 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 4,017,312 | 5,016,248 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான லெட்ஜர் கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ) | | 60,716,907 | 60,778,121 | |
| - | மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ) | | 60,716,907 | 60,778,121 | |
| | திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ) | | 912,674 | - | |
| | தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ-ஈ) | | 59,804,233 | 60,778,121 | |
| | கழி : செலவினம் | | | | |
| - | மீண்டுவரும் செலவினம் | | - | - | |
| 45,200,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 39,419,521 | 42,828,629 | ஏசீஏ-2(i) |
| 18,722,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 16,499,604 | 13,490,890 | |
| 814,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 724,457 | 1,003,990 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | |
| 64,736,000 | மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ) | | 56,643,582 | 57,323,509 | |
| | மூலதனச் செலவினம் | | | | |
| 680,000 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு, மேம்படுத்தல் | 10 | 628,945 | 1,220,651 | ஏசீஏ-2(ii) |
| 270,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 30,000 | - | |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | |
| | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | | - | |
| 1,400,000 | திறன் விருத்தி | 14 | 999,313 | 384,827 | |
| - | ஏனைய மூலதன செலவினங்கள் | 15 | - | - | |
| 2,350,000 | மொத்த மூலதனச் செலவினம் (எ) | | 1,658,258 | 1,605,478 | |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | | 137,591 | 28,073 | ஏசீஏ-4 |
| | முற்பணக் கொடுப்பனவுகள் | | 3,796,770 | 3,867,075 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான லெட்ஜர் செலவினம் | | - | - | |
| | மொத்தப்பிரதான லெட்ஜர் செலவினம் (ஏ) | | 3,934,361 | 3,895,148 | |
| | மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ) | | 62,266,201 | 62,824,135 | |
| - | டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ) | | (2,461,958) | (2,045,814) | |
| | பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி | | (2,461,958) | (2,045,814) | ஏசீஏ-7 |
| | டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி | | | | ஏசீஏ-3 |
| | | | (2,461,958) | (2,045,814) | |

1

**3.2**



## 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
## நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2023 | 2022 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| <u>நிதி சொத்துக்கள் அற்றது</u> | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 32,082,576 | 32,057,312 |
| <u>நிதி சொத்துக்கள்</u> | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 6,513,213 | 6,733,759 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | ஏசீஏ-3 | - | - |
| மொத்த சொத்துக்கள் | | **38,595,789** | **38,790,771** |
| <u>தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு</u> | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 6,513,213 | 6,733,759 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 32,082,576 | 32,057,012 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| <u>நடைமுறைப் பொறுப்புக்கள்</u> | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | - | - |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| மொத்தப் பொறுப்புக்கள் | | **38,595,789** | **38,790,771** |

பக்க இலக்கம் 07 முதல் 22 வரை ஏசீஏ 2 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 23 முதல் 30 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் குடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் மூலம் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்காளர் |
| பெயர்:கே.எம்.மஹிந்த சிறிவர்த்தன | பெயர்:ஏ.பி.குரும்பலப்பிட்டிய | பெயர்:யு.பீ.விஜயஷிஹரா |
| பதவி :திறைசேரிக்கான செயலாளர் | பதவி : பணிப்பாளர் நாயகம் | பதவி : பிரதிப் பணிப்பாளர் |
| திகதி : 2024.02 27 | திகதி : 2024.02 20 | திகதி : 2024.02 20 |

A.P. Kurumbalapitiya
Director General
Department of Management Audit
General Treasury
Colombo 01

උදේශිකා පී විජයශේඛර
නියෝජ්‍ය අධ්‍යක්ෂ
කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුව

2

**3.3**

2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான

காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | 2023 | 2022 |
| | ரூபா | ரூபா |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | | |
| இலாபம் | | |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | | |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 2,315,642 | 2,553,305 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 56,562,000 | 55,734,000 |
| முற்பணங்களை அறவிடல் | 3,765,270 | 4,228,342 |
| வைப்புக்களின் பெறுகை | 137,591 | 28,273 |
| தொழிற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ) | 62,780,502 | 62,543,920 |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஊழியருக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள் | 55,520,751 | 56,057,479 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 724,457 | 1,003,990 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | - | - |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 912,674 | - |
| முற்பணக் கொடுப்பனவு | 3,796,770 | 3,867,075 |
| வைப்புக் கொடுப்பனவு | 137,591 | 28,073 |
| தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ) | 61,092,244 | 60,956,617 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ) | 1,688,258 | 1,587,303 |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இறந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதிக சொத்துக்களின் விற்பனை | - | - |
| கடன்கள் மீதான அறவிடுகள் | - | - |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ) | - | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| மூலதனம் | 1,688,258 | 1,587,303 |
| முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ) | 1,688,258 | 1,587,303 |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ) | (1,688,258) | (1,587,303) |
| தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ) | 0 | 0 |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்நாட்டுக் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ) | - | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| உள்நாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ) | - | - |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ) | - | - |
| காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)+(ஒ) | 0 | 0 |
| ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி | 0 | 0 |
| டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி | 0 | 0 |

3

அறிக்கையிடலின் அடிப்படை

1) அறிக்கையிடல் காலப்பகுதி

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2023 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) அளவீட்டுக்கான அடிப்படை

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) வருமானத்தை அடையாளங்காணுதல்

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிகளுள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

4) சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகிறதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறுமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புடையதாகும்.

6) காசு மற்றும் காசுக்கு சமமானவை

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2023 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

•

ஒரு குறிப்பிட்ட அறிக்கையிடல் நிறுவனத்திற்கு குறிப்பிட்ட பரிவர்த்தனைகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் பொருத்தமான தகவல்களை உள்ளடக்கலாம் மற்றும் மாதிரிப்படிவங்களில் தேவைக்கேற்ப திருத்தங்களைச் செய்யலாம். அந்த குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுக்கு தேவையான வெளிப்படுத்தல் "அறிக்கையிடலின் அடிப்படை" என்பதற்குக் கீழ் சேர்க்கப்படலாம்.

* அறிக்கையிடல் நிறுவனத்திற்கு தொடர்புடைய கணக்கியல் கொள்கைகள் மட்டுமே "அறிக்கையிடலின் அடிப்படையின் கீழ் வெளிப்படுத்தப்படவேண்டும்.

6

### 3.5 வருமானத்தை திரட்டுவதன் செயலாற்றுகை

ரூபா. 000

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | திரட்டப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூபா) | இறுதி வருமான மதிப்பீட்டின் சதவீதமாக % |
| | | | | | |
| | ஏற்புடையதல்ல | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

### 3.6 ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்துவதன் செயலாற்றுகை

ரூபா. 000

| ஏற்பாடுகளின் வகை | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் | | உண்மை செலவினம் | பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் முடிவுறுத்தப்பட்ட இறுதி ஏற்பாட்டின் சதவீதமாக % |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஏற்பாடு | இறுதி ஏற்பாடு | | |
| | | | | |
| மீண்டுவரும் | 64,736 | 64,736 | 56,643 | 87.5% |
| | | | | |
| | | | | |
| மூலதனம் | 2,350 | 2,350 | 1,688 | 72% |
| | | | | |
| | | | | |
| | | | | |

**3.7 நி.ஓ. 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சர்களின் / திணைக்களங்களின் பிரதிநிதி என்ற வகையில் இந்த திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகள்**

ரூபா. 000

| தொடர் இலக் கம் | ஏற்பாடுகளை பெற்ற அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் | ஏற்பாட்டின் நோக்கம் | ஏற்பாடு | | உண்மை செலவினம் | பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் முடிவுறுத்தப்பட்ட இறுதி ஏற்பாட்டின் சதவீதமாக % |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப ஏற்பாடு | இறுதி ஏற்பாடு | | |
| | ஏற்புடையதல்ல | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

**3.8 நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை**

ரூபா. 000

| வருமான குறியீடு | குறியீட்டின் விபரம் | 2023.12.31ஆம் திகதியில் உள்ளவாறு திறைசேரி ஆய்வு அறிக்கைக்கு அமைவாக நிலுவை | 2023.12.31ஆம் திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை அறிக்கைக்கு அமைவாக நிலுவை | முன்வரும் காலங்களில் கணக்கீடு செய்யப்பட உள்ளவை | முன்னேற்றத்தை சதவீதமாக அறிக்கையிடல் % |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| 9151 | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | 0 | 0 | 0 | 0 |
| | | | | | |
| 9152 | இயந்திர சாதனம் | 32,082 | 32,082 | 0 | 100% |
| | | | | | |
| 9153 | காணி | 0 | 0 | 0 | 0 |
| | | | | | |
| 9154 | அருவமான சொத்துக்கள் | 0 | 0 | 0 | 0 |
| | | | | | |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | 0 | 0 | 0 | 0 |
| | | | | | |
| 9160 | நடைபெறும் பணிகள் | 0 | 0 | 0 | 0 |
| | | | | | |
| 9180 | குத்தகை சொத்துக்கள் | 0 | 0 | 0 | 0 |
| | | | | | |

## 3.9 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை


ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE


මගේ අංකය / எனது இல. / My No. TPD/C/23/31/DMA/FA

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2024 මැයි 10 දින

ගණන්දීමේ නිලධාරී

කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුව

**ශීර්ෂය 324 - කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුවේ 2023 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(1) වගන්තිය ප්‍රකාරව විගණකාධිපති සම්පිණ්ඩන වාර්තාව**

1. මූල්‍ය ප්‍රකාශන

1.1 මතය

ශීර්ෂය 324 - කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුවේ 2023 දෙසැම්බර් 31 දිනට මූල්‍ය තත්ත්ව ප්‍රකාශනය, එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය කාර්යසාධන ප්‍රකාශනය හා මුදල් ප්‍රවාහ ප්‍රකාශනය සහ ප්‍රමාණාත්මක ගිණුම්කරණ ප්‍රතිපත්තිවලට අදාළ තොරතුරු ද ඇතුළත් මූල්‍ය ප්‍රකාශනවලට අදාළ සටහන්වලින් සමන්විත 2023 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන, 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ විධිවිධාන සමඟ සංයෝජිතව කියවිය යුතු ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(1) ව්‍යවස්ථාවේ ඇතුළත් විධිවිධාන ප්‍රකාර මාගේ විධානය යටතේ විගණනය කරන ලදී. 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(1) වගන්තිය ප්‍රකාරව කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුව වෙත ඉදිරිපත් කරනු ලබන මෙම මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව මාගේ අදහස් දැක්වීම් හා නිරීක්ෂණයන් මෙම වාර්තාවේ සඳහන් වේ. 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(2) වගන්තිය ප්‍රකාරව ගණන්දීමේ නිලධාරී වෙත වාර්ෂික විස්තරාත්මක කළමනාකරණ විගණන වාර්තාව යථා කාලයේදී ඉදිරිපත් කරනු ලැබේ. ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(6) ව්‍යවස්ථාව සමඟ සංයෝජිතව කියවිය යුතු 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 10 වගන්තිය ප්‍රකාරව ඉදිරිපත් කළ යුතු විගණකාධිපති වාර්තාව යථා කාලයේදී පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරනු ලැබේ.

කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුවේ මූල්‍ය ප්‍රකාශනවලින් 2023 දෙසැම්බර් 31 දිනට කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුවේ මූල්‍ය තත්ත්වය සහ එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා මූල්‍ය කාර්යසාධනය හා මුදල් ප්‍රවාහ ප්‍රකාශය පොදුවේ පිළිගත් ගිණුම්කරණ මූලධර්මවලට අනුකූලව සත්‍ය හා සාධාරණ තත්ත්වයක් පිළිබිඹු කරන බව මා දරන්නා වූ මතය වේ.


අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

## 1.2 මතය සඳහා පදනම

ශ්‍රී ලංකා විගණන ප්‍රමිතිවලට (ශ්‍රී.ලං.වි.ප්‍ර) අනුකූලව මා විගණනය සිදු කරන ලදී. මෙම විගණන ප්‍රමිති යටතේ වූ මාගේ වගකීම්, මෙම වාර්තාවේ මූල්‍ය ප්‍රකාශන විගණනය සම්බන්ධයෙන් විගණකගේ වගකීම් යන කොටසේ තවදුරටත් විස්තර කර ඇත. මාගේ මතය සඳහා පදනමක් සැපයීම උදෙසා මා විසින් ලබා ගෙන ඇති විගණන සාක්ෂි ප්‍රමාණවත් සහ උචිත බව මාගේ විශ්වාසයයි.

## 1.3 මූල්‍ය ප්‍රකාශය සම්බන්ධයෙන් ප්‍රධාන ගණන්දීමේ නිලධාරීගේ හා ගණන්දීමේ නිලධාරීගේ වගකීම

පොදුවේ පිළිගත් ගිණුම්කරණ මූලධර්මවලට අනුකූලව හා 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 38 වගන්තියේ සඳහන් විධිවිධානවලට අනුකූලව සත්‍ය හා සාධාරණ තත්ත්වයක් පිළිබිඹු කෙරෙන පරිදි මූල්‍ය ප්‍රකාශන පිළියෙල කිරීම හා වංචා සහ වැරදි හේතුවෙන් ඇති විය හැකි ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශනයන්ගෙන් තොරව මූල්‍ය ප්‍රකාශන පිළියෙල කිරීමට හැකි වනු පිණිස අවශ්‍යවන අභ්‍යන්තර පාලනය තීරණය කිරීම ගණන්දීමේ නිලධාරීගේ වගකීම වේ. 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 16(1) වගන්තිය ප්‍රකාරව දෙපාර්තමේන්තුව විසින් වාර්ෂික හා කාලීන මූල්‍ය ප්‍රකාශන පිළියෙල කිරීමට හැකිවන පරිදි ස්වකීය ආදායම්, වියදම්, වත්කම් හා බැරකම් පිළිබඳ නිසි පරිදි පොත්පත් හා වාර්තා පවත්වා ගෙන යා යුතුය.

ජාතික විගණන පනතේ 38(1)(ඇ) උප වගන්තිය ප්‍රකාරව දෙපාර්තමේන්තුවේ මූල්‍ය පාලනය සඳහා සඵලදායී අභ්‍යන්තර පාලන පද්ධතියක් සකස් කර පවත්වා ගෙන යනු ලබන බවට ගණන්දීමේ නිලධාරී සහතික විය යුතු අතර එම පද්ධතියේ සඵලදායිත්වය පිළිබඳව කලින් කල සමාලෝචනයක් සිදු කර ඒ අනුව පද්ධතිය ඵලදායී ලෙස කරගෙන යාමට අවශ්‍ය වෙනස්කම් සිදු කරනු ලැබිය යුතුය.

## 1.4 මූල්‍ය ප්‍රකාශන විගණනය පිළිබඳ විගණකගේ වගකීම

සමස්තයක් ලෙස මූල්‍ය ප්‍රකාශන, වංචා හා වැරදි හේතුවෙන් ඇතිවන ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශයන්ගෙන් තොර බවට සාධාරණ තහවුරුවක් ලබාදීම සහ මාගේ මතය ඇතුළත් විගණන වාර්තාව නිකුත් කිරීම මාගේ අරමුණ වේ. සාධාරණ සහතිකවීම උසස් මට්ටමේ සහතිකවීමක් වන නමුත්, ශ්‍රී ලංකා විගණන ප්‍රමිති ප්‍රකාරව විගණනය සිදු කිරීමේදී එය සැම විටම ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශයන් අනාවරණය කර ගන්නා බවට වන තහවුරු කිරීමක් නොවනු ඇත. වංචා සහ වැරදි තනි හෝ සාමූහික ලෙස බලපෑම නිසා ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශනයන් ඇති විය හැකි

## 2. මූල්‍ය සමාලෝචනය

### 2.1 අග්‍රිම කළමනාකරණය

2023 වර්ෂයට රු.65,429,000 ක අග්‍රිම ඉල්ලුම් කිරීමට සැලසුම් කර තිබුණු නමුත් භාණ්ඩාගාරය විසින් දෙපාර්තමේන්තුව වෙත රු.56,562,000 ක අග්‍රිම නිකුත් කර තිබුණි. දෙපාර්තමේන්තුව සැලසුම් කරන ලද අග්‍රිම වටිනාකමින් සියයට 86 ක් පමණක් භාණ්ඩාගාරයෙන් දෙපාර්තමේන්තුවට නිකුත් කර තිබුණි.

### 2.2 වියදම් කළමනාකරණය

#### 2.2.1 ප්‍රතිපාදන මාරු කිරීම

සමාලෝචිත වර්ෂයේදී පුනරාවර්තන හා මූලධන වැය විෂයන් 06 ක එකතුව රු.16,600,000 ක ප්‍රතිපාදනයෙන් සියයට 4 සිට 46 දක්වා වූ පරාසයකින් ප්‍රතිපාදන අඩු කිරීම ද, වැය විෂයන් 05 ක එකතුව රු.1,800,000 ක ප්‍රතිපාදනයට සියයට 34 සිට 97 දක්වා වූ පරාසයකින් ප්‍රතිපාදන වැඩි කිරීම ද මු.රෙ.66 මාරු කිරීම් මගින් සිදු කර තිබුණි.

#### 2.2.2 ප්‍රතිපාදන උපයෝජනය

අංක 01/2023 හා 2023 ජනවාරි 27 දිනැති අයවැය චක්‍රලේඛයේ 02(අ) ඡේදය පරිදි 2023 අයවැය ඇස්තමේන්තු වල ඉඩ හැර ඇති වැය විෂයයන් හැර අනෙකුත් සියලුම පුනරාවර්තන වියදම් සඳහා වූ ප්‍රතිපාදනවල එකතුවෙන් සියයට 06 කට සමාන ප්‍රතිපාදන ප්‍රමාණයක් අවම වශයෙන් කපා හැරීමට කටයුතු කළ යුතු විය. දෙපාර්තමේන්තුවේ අදාල වැය විෂයන්ගේ ශුද්ධ ප්‍රතිපාදන එකතුව රු.36,236,000 න් රු.4,732,952 ක් හෙවත් සියයට 13 ක් ඉතිරි කර තිබුණි.

## 2.3 නීති, රීති හා රෙගුලාසිවලට අනුකූල නොවීම

නීතිරීති හා රෙගුලාසිවලට අනුකූල නොවූ අවස්ථා පහත දැක්වේ.

| | යොමුව | නීති, රීති හා රෙගුලාසිවලට අනුකූල නොවීම |
|---|---|---|
| (අ) | ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ මුදල් රෙගුලාසි සංග්‍රහය | |
| (i) | මු.රෙ.756 වගන්තිය | සමාලෝචිත වර්ෂයේ භාණ්ඩ සමීක්ෂණ වාර්තාව 2024 මාර්තු 31 දිනට පෙර විගණකාධිපති වෙත ඉදිරිපත් කර නොතිබුණි. |
| (ii) | මු.රෙ.892 වගන්තිය | ඇප තැබීමට අවශ්‍ය නිලධාරීන්ගේ සංශෝධිත වාර්තාවක් සෑම වර්ෂ තුනක් අවසානයේදී පසුව යෙදෙන පෙබරවාරි 15 වැනි දිනට පෙර විගණකාධිපති වෙත ඉදිරිපත් කළ යුතු වුවත්, එසේ ඇප සංශෝධිත නිලධාරීන්ගේ වාර්තාවක් 2024 මාර්තු 25 දින තෙක් ඉදිරිපත් කර නොතිබුණි. |
| (ආ) | 2010 ජූලි 09 දිනැති අංක සි/ඒ/1/1/16/1 දරණ ජනාධිපති ලේකම්ගේ චක්‍රලේඛය | රජයේ නිලධාරීයකු විදේශ සංචාරයේ යෙදී ආපසු දිවයිනට පැමිණීමෙන් දින 07 ක් ඇතුළත උක්ත චක්‍රලේඛය (ඊ) ඇමුණුමේ ඇති ආකෘතිය ප්‍රකාරව වාර්තාවක් විදේශ ගමන් අනුමත කරන නිලධාරියා වෙත ලබාදිය යුතු වුවත් 2023 වර්ෂය තුළදී විදේශ සංචාරයන් සඳහා සහභාගී වූ නිලධාරීන් 06 දෙනෙකු චක්‍රලේඛ විධිවිධාන ප්‍රකාරව නියමිත දිනට වාර්තා ඉදිරිපත් කර නොතිබූ බව නිරීක්ෂණය විය. |
| (ඇ) | 2023 නොවැම්බර් 30 දිනැති රාජ්‍ය ගිණුම් මාර්ගෝපදේශ අංක 05/2023 – 7.6 ඡේදය | මූල්‍ය කාර්යසාධන ප්‍රකාශයේ සංශෝධිත අයවැය ප්‍රතිපාදනය තීරුවට අයවැය ප්‍රතිපාදනවලට මු.රෙ. 66 මාරුකිරීම් හා පරිපූරක ප්‍රතිපාදන ගැලපීමෙන් පසු අගය යොදා ගත යුතු වුවද, ඒ අනුව කටයුතු කර නොතිබුණි. |

5

## 3. මෙහෙයුම් සමාලෝචනය

### 3.1 කාර්යසාධනය

#### 3.1.1 කාර්යභාරයන් ඉටුකිරීමේ ප්‍රගතිය

(අ) අංක 2289/43 හා 2022 ජූලි 22 දිනැති ගැසට් පත්‍රයට අනුව භාණ්ඩාගාර නියෝජිතයන් පත්කර ඇති ආයතන සඳහා 2023 වර්ෂය තුළ පැවැත්විය යුතු විගණන හා කළමනාකරණ කමිටු රැස්වීම් ගණන 558 ක් විය. එහෙත් 2023 වර්ෂයේ විගණන හා කළමනාකරණ කමිටු රැස්වීම් 400 ක් පමණක් පවත්වා තිබූ අතර, ඉන් 375 කට දෙපාර්තමේන්තු නිලධාරීන් සහභාගී වී තිබුණි. එය පවත්වා තිබූ මුළු රැස්වීම් ගණනින් සියයට 94 ක් බව නිරීක්ෂණය විය.

(ආ) රාජ්‍ය අංශයේ අනුමිතතා සොයා ගැනීමට දායකවීම සඳහා අවසන් කර ඇති හා පවරා ඇති විමර්ශනවල ප්‍රගතිය සියයට 72 ක මට්ටමක පැවති බව නිරීක්ෂණය විය.

(ඇ) පළාත් පාලන ආයතනවල සහ පළාත් සභාවල අභ්‍යන්තර විගණන ඒකක විධිමත් කිරීම සහ ශක්තිමත් කිරීම සඳහා පළාත් සභා අභ්‍යන්තර විගණන ඒකක සඳහා පුහුණු වැඩමුළු පැවැත්වීමේ ප්‍රගතිය සියයට 76 ක් බව නිරීක්ෂණය විය.

## 4. මානව සම්පත් කළමනාකරණය

දෙපාර්තමේන්තුවේ අනුමත තනතුරු සංඛ්‍යාව 50 ක් වූ අතර, ඉන් තනතුරු 09 ක් පුරප්පාඩුව පැවතුණි. පුරප්පාඩුවලින් 04 ක් ම ජ්‍යෙෂ්ඨ මට්ටමේ තනතුරු විය. එම පුරප්පාඩු තනතුරු පිරවීමට හෝ අනුමත සේවක සංඛ්‍යාව සංශෝධනය කරවා ගැනීමට දෙපාර්තමේන්තුව කටයුතු කර නොතිබුණු බව නිරීක්ෂණය විය.

ඩී.ඩබ්.ඩී. ප්‍රනාන්දු
ජ්‍යෙෂ්ඨ සහකාර විගණකාධිපති
විගණකාධිපති වෙනුවට

6

# அத்தியாயம் 04 – செயலாற்றுகை சுட்டிகள்

## 4.1 நிறுவனத்தின் செயலாற்றகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

| தொடர் இல. | குறிப்பீட்டு சுட்டிகள் | எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு | | |
|---|---|---|---|---|
| | | 100%- 90% | 75%-89% | 50%- 74% |
| 01 | **உள்ளக கணக்காய்வு பணியாளர்களின் திறன்களை விருத்தி செய்தல்.**<br><br>சகல அமைச்சுக்கள், விசேட செலவின அலகுகள், மாகாண சபைகள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள், கருத்திட்ட அலுவலகங்கள் மற்றும் வரவு செலவுத்திட்டத்தின் மூலம் நிதியிடப்படுகின்ற அரச தொழில்முயற்சிகளின் பிரதான உள்ளக கணக்காய்வாளர்கள், மாகாண உள்ளகக் கணக்காய்வுப் பணிப்பாளர்கள், உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளுக்கு இணைக்கப்பட்டுள்ள பதவியினர்களுக்காக 2023 ஆம் ஆண்டில் 13 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த அதேவேளையில், உண்மையாக 12 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இதனிடையே அடிப்படை உள்ளகக் கணக்காய்வுப் பயிற்சி, உள்ளகக் கணக்காய்வு ஒழுக்கநெறிகள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் தரங்கள், நிர்மாணக் கருத்திட்டங்கள் தொடர்பான முக்கியமான தொழில்நுட்ப விடயங்கள், வரியிடல், அபாய விலைமதிப்பீடு மற்றும் அபாய முகாமைத்துவம் மற்றும் சம்பளத்தை தயாரிக்கும் கணணி நிகழ்ச்சித்திட்டங்களைக் கணக்காய்வு செய்தல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்குகின்றன. | 92% | | |
| 02 | **உள்ளக கணக்காய்வு செயன்முறையினை முறைமைப்படுத்துதல்**<br>1 உள்ளகக் கணக்காய்வாளர்களின் தரவுத் தளத்தை இற்றைப்படுத்துதல்.<br><br>2 திருத்தப்பட்ட சுற்றிக்கை - (DMA – 01/2019 சுற்றிக்கையின் அத்தியாய இலக்கம் 06 மற்றும் அதன் பின்னிணைப்பைத் திருத்துதல்.) | 100%<br><br>100% | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 03 | **உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளினூடாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு (AMC) சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துதல் மற்றும் அரச துறையின் பொறுப்புக்களை வலுப்படுத்துவதனை சான்றுப்படுத்துதல்.**<br>1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவுக்கு (AMC) முகாமைத்துவக் கணக்காய்வு பிரதிநிதிகளை நியமித்தல் - (29 அமைச்சுக்கள், 43 தெரிவுசெய்யப்பட்ட திணைக்களங்கள், 25 மாவட்ட செயலகங்கள், 09 விசேட செலவின அலகுககள், 09 மாகாண சபைகள் என 115 நிறுவனங்களுக்கு பிரதிநிதிகளை நியமித்தல்).<br>2 **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களை நடாத்துதல்.**<br>I. திறைசேரி பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டுள்ள நிறுவனங்களுக்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களை நடாத்துதல். (நடாத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காயவுக் குழு கூட்டங்களின் எண்ணிக்கை 400 ஆகும். அதில் 375 குழுக் கூட்டங்களுக்குப் பங்குபற்றியுள்ளன. அத்தியவசியமான ஏனைய கடமைகள் அதே தினத்தில் இருந்ததன் காரணமாக 25 குழுக் கூட்டங்களுக்குப் பங்குபற்றியிருக்க வில்லை.) | **100%**<br><br>**94%** | | |
| 04 | **அரச கணக்குகள் பற்றிய செயற்குழுவின் (COPA) நடவடிக்கைகளின் ஊடாக அரச துறையின் பொறுப்புக் கூறலின் வலுவுட்டுதல்**<br>2023 ஆம் ஆண்டில் 74 அரச கணக்குகள் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டுள்ள அதேவேளையில், அந்த சகல சந்தர்ப்பங்களிலும் இந்தத் திணைக்களம் பங்குபற்றியுள்ளது. இதற்கு மேலதிகமாக 2023 ஆம் ஆண்டில் அரச கணக்குகள் குழுவினால் கணக்காய்வு அறிக்கை மற்றும் விசேட விடயங்கள் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட உப குழுவின் கலந்துரையாடல்களுக்காக பங்களிப்பை வழங்கியுள்ளது. அரச கணக்குகள் குழுக் கூட்டத்திற்கு உரிய தினத்திற்கு முன்னர் பொதுத் திறைசேரியினால் வழங்கவேண்டிய திறைசேரியின் அறிக்கையை திறைசேரியின் ஏனைய திணைக்களங்களுடன் கூட்டிணைப்பை மேற்கொண்டு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | **100%** | | |

## அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

| தொடர் இல. | குறிப்பீட்டு சுட்டிகள் | எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு | | |
|---|---|---|---|---|
| | | 100%- 90% | 75%-89% | 50%- 74% |
| 05 | **அரச துறைகளின் முறைகேடுகளை தேடிப்பார்ப்பதற்கு பங்களிப்பு செய்தல்.**<br><br>2023.12.31 ஆம் திகதியளவில் தேவையான நடவடிக்கைகளை எடுத்து நிறைவுசெய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 32 ஆகும். அதேவேளையில் மேலும் நிறைவுசெய்யவுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 12 ஆகும்.<br><br>2023 ஆம் ஆண்டில் கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 44<br><br>நிருவாகரீதியான பிரச்சினைகள் சம்பந்தமான முறைப்பாடுகளின் எண்ணிக்கை 19<br><br>நிதிப் பிரச்சினைகள் சம்பந்தமான முறைப்பாடுகளின் எண்ணிக்கை 11<br><br>பெறுகைப் பிரச்சினைகள் சம்பந்தமான முறைப்பாடுகளின் எண்ணிக்கை 08<br><br>ஏனைய பிரச்சினைகள் சம்பந்தமான முறைப்பாடுகளின் எண்ணிக்கை 06 | | | **72%** |
| 06 | **உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளின் செயலாற்றுகையின் அறிக்கையை மேற்பார்வை செய்தல் செயலாற்றுகை மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை.**<br><br>அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள் மற்றும் மாகாண சபைகளின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளின் வினைத்திறன், தரம் மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு 2023 ஆம் ஆண்டில் 19 நிறுவனங்களில் உள்ளகக் கணக்காய்வாளர்களின் செயலாற்றுகை மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. இதன்போது உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது ஏற்படுகின்ற பிரச்சினைகள், கவனத்தைச் செலுத்தவேண்டிய விடயங்கள் மற்றும் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடி தேவையான ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் உள்ளகக் கணக்காய்வை வலுவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | **90%** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 07 | **தேசிய கணக்காய்வு சட்டத்திற்கு அமைவாக உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளைத் திரட்டுதல்.**<br><br>(I) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு உள்ளகக் கணக்காய்வாளரினால் சமர்ப்பிக்கப்படுகின்ற சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகளை முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும் எனக் காட்டப்பட்டுள்ளது.<br>அதற்கு அமைவாக, இந்தத் திணைக்களத்திற்குக் கிடைக்கின்ற உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை, மென் பிரதிகளாகப் பெற்று தரவுத் தளமொன்று பேணப்பட்டு வருகின்றது. இதன்படி 2023 ஆம் ஆண்டில் எமது திணைக்களத்திற்கு கிடைத்த உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை 7096 ஆகும்.<br><br>(II) அதேபோன்று அந்த உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் தொடர்புடைய கணக்காய்வு நிறுவனங்களின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்திற்கு பங்குற்றுகின்ற திறைசேரியின் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும். அந்த விடயங்களை ஆராய்ந்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் அதன் முக்கியமான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் பற்றி கலந்துரையாடப்படுகின்றது.<br><br>(III) அதேபோன்று சகல காலாண்டின் இறுதியிலும் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கைப் பிரதிகளின் சுருக்க அறிக்கையொன்று பணிப்பாளர் நாயகம் அவர்களின் தகவலுக்காக அனுப்பப்படுகின்றது. | **100%**<br><br>**100%**<br><br>**100%** | | |
| **08** | **அமைச்சின் கிழ் உள்ள வெளிநாட்டு நிதியங்களை வழங்குகின்ற கருத்திட்டங்களின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை வலுவூட்டுதல்.**<br><br>கருத்திட்டங்களின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் ஒரு நடவடிக்கையாக 2023 ஆம் ஆண்டில் 33 கருத்திட்ட உள்ளகக் கணக்காய்வு மீளாய்வுக் குழுக் கூட்டங்களுக்கு பங்குபற்றியதன் ஊடாகவும், தெரிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு நிதியிடல் கருத்திட்ட முகாமைத்துவ அலகுகளை அவதானிப்பதன் ஊடாகவும் பொதுவாக கருத்திட்ட செயலாற்றுகைக்கு தாக்கம் செலுத்துகின்ற பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டன. அந்தப் பிரச்சினைகளிடையே திட்டமிடல் பலவீனம், வளப் பயன்பாட்டு பிரச்சினைகள், சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்காமை, முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்பப் பிரச்சினைகள், தொடர்புடைய தரப்பினர்களின் பங்களிப்பு குறைவடைகின்றமை அதேபோன்று போதுமான அபாய முகாமைத்துவம் இல்லாமை என்பனவும் அவதானிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று இது பற்றிய மேலதிக அவதானிப்புகளை | **95%** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேற்கொள்வதற்காக பிரச்சினைக்குரிய நிலைமைகள் அவதானிக்கப்பட்ட தெரிவுசெய்யப்பட்ட 02 நிரல் அமைச்சுக்களின் 03 பிரதான வெளிநாட்டு நிதியிடல் கருத்திட்டங்கள் சம்பந்தமான கள அவதானிப்பு நடவடிக்கைகள் உட்பட விசேட விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டு அடையாளம் காணப்பட்ட பிரச்சினைக்குரிய நிலைமைகள் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட தொடர்புடைய அதிகாரிகளுக்கு விளக்கமளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம், கருத்திட்ட முகாமைத்துவம் பற்றிய முறையான வழிகாட்டலொன்றை வெளியிடுவது இதுவரை மேற்கொள்ளப்படாதிருப்பதன் காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைக்குரிய நிலைமைக்கு ஒரு பரிகாரமாக கருத்திட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட பொதுத் திறைசேரியின் தொடர்புடைய திணைக்களங்களினதும் ஏனைய தொடர்புடைய தரப்பினர்களினதும் பங்களிப்புடனும் உடன்பாட்டுடனும் விபரமான கருத்திட்ட முகாமைத்துவ வழிகாட்டலொன்று வரைவுசெய்யப்பட்டுள்ளது. | | | |
| 09 | **உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் மாகாண சபைகளின் உள்ளகக் கணக்காய்வு அலகுகளை முறைமைப்படுத்துதல் மற்றும் வலுவூட்டுதல்**<br><br>**01. மாகாண சபைகளின் உள்ளகக் கணக்காய்வு அலகுகள் சம்பந்தமான தரவுத் தளத்தை இற்றைப்படுத்துதல்**<br><br>சகல மாகாண சபைகளிலும் உள்ள உள்ளகக் கணக்காய்வு அலகுகள் சம்பந்தமான தகவல்களை மின்னஞ்சல் மூலம் பெற்று தரவுத்தளத்தில் இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக சகல மாகாண சபைகளிலும் உள்ள மாகாண உள்ளகக் கணக்காய்வாளர்களதும் அந்தப் பிரிவில் உள்ள உத்தியோகத்தர்களினதும் தகவல்களைப் பெற்று வெவ்வேறான கணணிக் கோப்புகளில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>**02. மாகாண சபைகளின் உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்திற்கான பயிற்சி செயலமர்வுகளை நடாத்துதல்**<br>2023 ஆம் ஆண்டில் மத்திய அரசாங்கத்தின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்களின் பொருட்டு ஒழுங்குசெய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களங்களின் உள்ளகக் கணக்காய்வுப் பணிப்பாளர்களும் பங்குபற்றச் செய்யப்பட்ட அதேவேளையில் 2023 ஆம் ஆண்டில் மத்திய அரசங்க நிறுவனங்களில் உள்ள உள்ளகக் கணக்காய்வு பதவியினர்களுக்காக Zoom தொழில்நுட்பத்தின் மூலம் | 90% | 75% | |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களங்களில் உள்ள கணக்காய்வு உத்தியோகத்தர்களையும் பங்குபற்றச்செய்து அவர்களுக்குத் தேவையான அறிவு வழங்கப்பட்டது.<br><br>03. **மாகாண சபைகளின் உள்ளகக் கணக்காய்வு அலகுகளிலிருந்து கணக்காய்வு அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல்**<br><br>மாகாண சபைகளின் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களங்களினால் வருடாந்த கணக்காய்வுத் திட்டத்திற்கு அமைவாக வருடத்திற்குள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள கணக்காய்வுகளை மேற்கொண்டதன் பின்னர் அது தொடர்பான கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை இந்தத் திணைக்களத்திற்கு மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு சகல மாகாண சபைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக அனுப்பப்படுகின்ற கணக்காய்வு அறிக்கைகள் வெவ்வேறாக கணணிக் கோப்புகளுக்கு சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | | 76% | |
| 10 | **மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் உள்ள உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளைக் கூட்டிணைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்**<br><br>1 மாவட்ட செயலகங்களில் உள்ள பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்களின் தரவுத்தளத்தை இற்றைப்படுத்துதல்.<br>2 மாவட்ட செயலகங்களில் உள்ள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்களில் எழுப்பப்பட்ட பிரச்சினைகள் சம்பந்தமாக நடவடிக்கைகளை எடுத்தல்.<br>3 மாவட்ட செயலகங்களில் காலாண்டு அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பித்தல்.<br>4 மாவட்ட செயலகங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு அறிக்கையை மதிப்பீடு செய்வதற்காக பெற்றுக்கொள்ளல்.<br>5 தேவையான சந்தர்ப்பங்களில் உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டல்களை புதிதாக வெளியிடுதல் மற்றும் திருத்துதல். | **100%**<br><br>100%<br><br>90% | 80%<br><br>85% | |

**5.1 அடையாளம் காணப்பட்ட தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள்**

| **இலக்கு / குறிக்கோள்** | **இலக்கு** | **வெற்றிக் குறிகாட்டிகள்** | **இதுவரை அடையப்பெற்ற முன்னேற்றம்** | | |
|---|---|---|---|---|---|
| | | | **0%-49%** | **50%-74%** | **75%- 100** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நோக்கத்தை நடைமுறைப்படுத்தும் ஊடகங்களை வலுவூட்டுதல் மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கான தேசிய பங்குதாரர்களை புத்துயிர் பெறச்செய்தல். | வறுமையை ஒழித்தல் மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கான கொள்கைகளை தாபித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றுக்காக இந்த திணைக்களத்தின் கொள்கை வாய்ப்பபுக்கள் நடவடிக்கை திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக தலைமைத்தவத்தை வழங்குதல். | திணைக்களத்திற்கு உரிய பெறுபேற்று வரைசட்டகம் மற்றும் திட்டமிடல் கருவிகளின் பயன்பாடு – **சுட்டிகள்** ❖ வருடாந்த நடவடிக்கை திட்டம் ❖ வருடாந்த கணக்காய்வு திட்டம் ❖ வருடாந்த செயலாற்றுகை அறிக்கை | | | 100% 100% 100% |
| | முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்தின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு உதவுவதற்காக அறிவு, நிபுணத்துவம் தொழிநுட்பம் மற்றும் நதி வழங்களை வலுவூட்டுதல் மற்றும் விநியோகித்தல் ஆகியவற்றுக்கு பல்தரப்பு பங்குதாரர்களின் ஒத்தழைப்புடன் நிலைபேறான அபிவிருத்திக்ான தேசிய பங்குடைமையினை மேம்படுத்துதல். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு உதவுகின்ற பல்தரப்பு பங்குதாரர்களின் அபிவிருத்தி உற்பத்தித்திறனை மேற்பார்வை செய்யும் வரைசட்டகத்தின் முன்னேற்றத்தை அறிக்கையிடுதல். **சுட்டிகள்** ❖ முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களம் பிரதிநிதித்துவப்படுத்திய முகாமைத்துவக் கணக்காய்வு முகாமைத்துவக் கூட்டங்களின் எண்ணிக்கை 400 கூட்டங்களில் 375 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. | | | 94% |

## 5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான வெற்றி மற்றும் சவால்கள்

### 5.2.1 வெற்றிகள்

அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள் மற்றும் விசேட செலவின அலகுகளின் 400 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் 375 கூட்டங்களுக்கு முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பிரதிநிதிகள் பங்குற்றிய அதேவேளையில் இதன்மூலம் நிதி, மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்களை உற்பத்தித் திறனுடனும் வினைத்திறனுடனும் பயன்படுத்துவதற்குத் தேவையான தலையீடுகள் மற்றும் வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் மூலம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நேடியாகவும் மறைமுகமாகவும் பங்களிப்புச் செய்துள்ளது.

### 5.2.2 சவால்கள்

நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியின் காரணமாக ஒருசில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்கு பௌதீக ரீதியில் தொடர்பு கொள்வதற்கு முடியாமற் போனமை மற்றும் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்கள் உள்ளிட்ட உத்தியோகத்தர்களிடையே நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு தமது பணிகள் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பது பற்றிய புரிந்துணர்வு குறைவடைந்துள்ளமையும், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்குச் செல்கின்ற பயணத்தில் சவாலாக அமைந்துள்ளது. உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை மற்றும் பயிற்சிபெற்ற உதவிப் பணியாளர்கள் இல்லாமை என்பனவும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்குப் பங்களிப்புச் செய்வதற்குத் தடையாக உள்ளது.

# அத்தியாயம் 06 - மனித வள விபரம்

## 6.1 பதவியணி முகமைத்துவம்

| | அனுமதியளிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை | தற்போது காணப்படுகின்ற பதவியணியின் எண்ணிக்கை | வெற்றிடம்/ (மிகை)** |
|---|---|---|---|
| சிரேட்ட நிலை | 17 | 13 | 04 |
| மூன்றாம் நிலை- | - | - | - |
| இரண்டாம் நிலை | 23 | 20 | 03 |
| ஆரம்ப நிலை | 10 | 08 | 02 |

## 6.2 ** நிறுவனத்தின் செயலாற்றுகையின் பொருட்டு மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தியுள்ள விதம்

❖ **சிரேட்ட நிலை:** 04 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், ஏனைய உத்தியோகத்தர்களினால் கடமைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளபடியினால் நிறுவனத்தின் செயலாற்றுகையில் பாரிய தாக்கம் ஏற்படவில்லை.

❖ **இரண்டாம் நிலை:** 03 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், ஏனைய உத்தியோகத்தர்களினால் கடமைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளபடியினால் நிறுவனத்தின் செயலாற்றுகையில் பாரிய தாக்கம் ஏற்படவில்லை.

❖ **ஆரம்ப நிலை :**

- ❖ **சாரதிகள் :** சிரேட்ட உத்தியோகத்தர்கள் இருவர் மாத்திரம் ஒதுக்கப்பட்டுள்ள உத்தியோகப்பூர்வ வாகனத்தை பயன்படுத்தகின்ற அதேவேளையில், ஏனைய சிரேட்ட உத்தியோகத்தர்களின் கடமைக்காக ஒதுக்கப்பட்டுள்ள உத்தியோகப்பூர்வ வாகனங்கள் பயன்படுத்தப்படாதபடியினால் திணைக்களத்தின் செயலாற்றுகைக்காக சாரதிகளின் வெற்றிடம் தாக்கம் செலுத்தவில்லை.

## 6.3 மனித வள அபிவிருத்தி (வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்)

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டக் காலம் | மொத்த முதலீடு (ரூபா 931,172.93) | | நிகழ்ச்சித்திட்டத் தின் இயல்பு (உள்நாட்டு / வெளிநாட்டு) | அடைவுகள் பெற்றுக்கொண்ட அறிவு* |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| Seminar on Cross-Border E-Commerce for Sri Lanka | 2 | 2023.08.07-2023.08.20 | 309,123.90 | - | வெளிநாடு | அறிவை வழங்குதல். |
| Seminar on Enhancing of Young Officials in Development Countries (SIBO) | 1 | 2023.08.16-2023.09.29 | 154,947.13 | - | வெளிநாடு | அறிவை வழங்குதல். |
| Seminar on Chinas Foreign Aid Projects Complete Sers Equipment-AIBO | 1 | 2023.10.10-2023.10.23 | 154,880.50 | - | வெளிநாடு | அறிவை வழங்குதல். |
| Seminar on marine Spatial Planning and Blue Economic Development for Developing Countries | 2 | 2023.11.01-2023.11.14 | 312,221.40 | - | வெளிநாடு | அறிவை வழங்குதல். |

6.4 மனித வள அபிவிருத்தி (உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்)

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை | நிகழ்ச்சித்தி ட்டக் காலம் | மொத்த முதலீடு (ரூபா 196,000/=) | | நிகழ்ச்சித்திட்டத் தின் இயல்பு (உள்நாட்டு / வெளிநாட்டு) | அடைவுகள் பெற்றுக்கொண்ட அறிவு* |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| செயலாற்றுகையை அளவிடுதல் மற்றும் செயலாற்றுகை முகாமைத்துவம் - சான்றிதழ் கற்கைநெறி | 01 | | (ரூபா 15000/= | - | உள்நாடு | செயலாற்றுகையை அளவிடுதல் மற்றும் செயலாற்றுகை முகாமைத்துவம் பற்றிய அறிவு |
| Diploma in Procurement and Contract Administration(DPMCA) | 01 | | (ரூபா 50000/= | - | உள்நாடு | பெறுகை மற்றும் ஒப்பந்த நிருவாகம் |
| கடித முகாமைத்துவத் தொகுதி பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 01 | | பணம் அறவிடப்பட வில்லை | - | உள்நாடு | கடித முகாமைத்துவம் |
| அரச கரும மொழித் தேர்ச்சிக்கான கற்கைநெறி | 02 | | பணம் அறவிடப்பட வில்லை | - | உள்நாடு | தமிழ் மொழி |
| Excel பற்றிய பயிற்சிக் கற்கைநெறி | 29 | | ரூபா 32000/= | - | உள்நாடு | கணினி |
| Public Procurement Procedures | 02 | | ரூபா 19000/= | | உள்நாடு | அரசாங்க பெறுகை முறைமை |
| Salary Conversions | 01 | | ரூபா 9500/= | | உள்நாடு | சம்பளத்தைத் தயாரித்தல் |
| Prepare Procurement plan | 01 | | ரூபா 9500/= | | உள்நாடு | பெறுகை |
| குணக்கு எழுதுநர்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் | 02 | | ரூபா 19000/= | | உள்நாடு | கணக்கு |
| Diploma in Professional English - 2023 | 01 | | ரூபா 92000/= | | உள்நாடு | ஆங்கில மொழி |

# அத்தியாயம் 07 – இணக்க அறிக்கை

| இலக்கம் | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது |
|---|---|---|---|---|
| 1 | **பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கமானது. | | |
| 1.2 | அரச அலுவலர்கள் முற்பணம் ''பீ'' கணக்கு | இணக்கமானது. | | |
| 1.3 | வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்) | ஏற்புடையதல்ல. | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | ஏற்புடையதல்ல. | | |
| 1.5 | விசேட முற்பணக் கணக்கு | ஏற்புடையதல்ல. | | |
| 1.6 | ஏனைய | | | |
| 2 | **புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445)** | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது. | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது. | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது. | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது. | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது. | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை இற்றைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.7 | பொருட் பதிவேட்டினை இற்றைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டினை இற்றைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.9 | இழப்பு பதிவேட்டினை இற்றைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.10 | பொறுப்பு பதிவேட்டை இற்றைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.11 | அடிக்கட்டை புத்தகங்களின் (GA – N20) பதிவேட்டை இற்றைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 03 | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன | இணக்கமானது | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது | இணக்கமானது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 3.4 | 2014.05.11 திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக நடவடிக்கை எடுத்தல் | இணக்கமானது | | |
| 4 | **வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டு திட்டத்தைத் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.2 | வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வரவு செலவுத் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | திட்டத் திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல் | | | |
| 4.5 | வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 5 | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| 5.1 | அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது | இணக்கமானது. | | |
| 6 | **உள்ளகக் கண்காய்வு** | | | |
| 6.1 | நி. பி. 134 (2) DMA 2019 - 1 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | ஏற்புடையதல்ல. | திறைசேரி திணைக்களங்கள் சம்பந்தமாக நிதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வினால் கணக்காய்வு திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கு அமைவாக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல். | இணக்கமானது | | |
| 6.3 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல். | ஏற்புடையதல்ல | நிதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளரினால் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களுக்கு உரிய உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பிரதிகள் முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. | |
| 6.4 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல். | ஏற்புடையதல்ல | இந்த திணைக்களம் தொடர்பான உள்ளக கணக்காய்வு பிரிவு எதுவும் இல்லை மற்றும் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு நிதி அமைச்சின் உள்ளக கணக்காய்வாளரால் செய்யப்படுகிறது. அதன்படி நிதியமைச்சின் உள்ளக கணக்காய்வாளர் உள்ளக கணக்காய்வு அறிக்கையை கணக்காய்வாளர் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நாயகத்திற்கு அனுப்புகிறார். | |
| 7 | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | DMA 2019 -1 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காண்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன | ஏற்புடையதல்ல | அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளரினால் தொடர்புடைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.) | |
| 8 | **ஆதன முகாமைத்துவம்** | | | |
| 8.1 | ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 01/2017 இன் 07 ஆம் அத்தியாயத்தின்படி, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் | இணக்கமானது. | | |
| 8.2 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமாதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். | இணக்கமானது. | | |
| 8.3 | அரச நிதி சுற்றறிக்கை இல. 05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | ஏற்புடையதல்ல | பொருட் கணக்கடுப்பு நடவடிக்கைகளை உரிய தினத்தில் பௌதீக ரீதியாக நிறைவு செய்து இறுதி அறிக்கையை பெற்றுக் கொண்ட போதிலும் நி.ஒ. 772 இன் பிரகாரம் அகற்றல் நடவடிக்கை முடிவடையாததன் காரணமாக கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்ப முடியவில்லை. தற்போது அறிக்கையை கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | அடுத்த வருடம் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அகற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வது நடைமுறை ரீதியாக சிரமமாக இருக்கின்றபடியினால் அரச நிதி சுற்றறிக்கையை திருத்துவதற்கு தேவையான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8.5 | நி.பி 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது | ஏற்புடையதல்ல | அறிக்கைக்கு அமைவாக 42 அடையாளம் காணப்பட்ட பயன்பாட்டுக்கு எடுக்க முடியாத பொருட்கள் சம்பந்தமாக அகற்றல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது | அடுத்த வருடம் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அகற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வது நடைமுறை ரீதியாக சிரமமாக இருக்கின்றபடியினால் அரச நிதி சுற்றறிக்கையை திருத்துவதற்கு தேவையான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 9 | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது. | | |
| 9.2 | கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு 06 மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும். | இணக்கமானது. | | |
| 9.3 | வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும் | இணக்கமானது. | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி நட வடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இணக்கமானது. | | |
| 9.5 | 2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016/30 இன் பத்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல். | இணக்கமானது. | | |
| 9.6 | குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும். | இணக்கமானது. | | |
| 10 | வங்கி கணக்குகளின் முகாமை | | | |
| 10.1 | உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது. | | |
| 10.2 | மீளாய்வு வருடத்திலிருந்து அல்லது அதற்கு முன்னைய வருடங்களிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல் | இணக்கமானது. | | |
| 10.3 | வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் சீராக்கம் செய்ய | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேண்டியிருந்த நிலுவைகள் சம்பந்தமாக நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொண்டு அத்தகைய நிலுவைகளை ஒரு மாதத்திற்குள் தீர்த்தல். | | | |
| 11 | **நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்** | | | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை அவற்றின் வரையறைகளை மீறாதபடி செலவிடல். | இணக்கமானது. | | |
| 11.2 | நி.பி. 94 (1) இன்படி பயன்படுத்தியதன் பின்னர் வருடத்தின் இறுதியில் எஞ்சிய ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் தொடர்ந்திருக்கும். | இணக்கமானது. | | |
| 12 | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல் | இணக்கமானது. | | |
| 12.2 | நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திரு த்தல். | இணக்கமானது. | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல் | இணக்கமானது. | | |
| 13 | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலாவதியான வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | இணக்கமானது. | | |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை இற்றைப்படுத்தி பேணிவருதல் | இணக்கமானது. | | |
| 14 | **முன்பணக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது | இணக்கமானது. | | |
| 14.2 | நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும் | இணக்கமானது. | | |
| 14.3 | நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல் | இணக்கமானது. | | |
| 14.4 | மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும் | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | **வருமான கணக்கு** | | | |
| 15.1 | ஏற்புடைய ஒழுங்குவிதிகளுக்கு சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும் | ஏற்புடையதல்ல | | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் | ஏற்புடையதல்ல | . | |
| 15.3 | நி.பி 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல் | ஏற்புடையதல்ல | | |
| 16 | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல் | இணக்கமானது. | | |
| 16.2 | ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல் | இணக்கமானது. | | |
| 16.3 | 2017.09.20 திகதியிட்ட மு.சே.தி. சுற்றறிக்கை இல. 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது. | | |
| 17 | **பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்** | | | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்து தகவல்களை வழங்கும் அட்டவணையொன்றை இற்றைப்படுத்தி பேணிவருதல் | இணக்கமானது. | | |
| 17.2 | நிறுவனம் பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள் / குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல். | இணக்கமானது. | | |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல். | இணக்கமானது. | | |
| 18 | **பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்** | | | |
| 18.1 | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல். | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 18.2 | சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது. | இணக்கமானது. | | |
| 19 | **மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்** | . | | |
| 19.1 | 2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல். | இணக்கமானது. | | |
| 19.2 | ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணி நேரத்திற்கும் குறையாமல் பயிற்சி வாயப்பை வழங்கியிருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும். | இணக்கமானது. | | |
| 19.3 | மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |
| 19.4 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல். | இணக்கமானது. | | |
| 20 | **கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்** | | | |
| 20.1 | முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல் | இணக்கமானது. | | |

**முற்றும்**